ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

8. அறிவிப்புகள்

பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்– கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு* (Committee on Estimates), *பொதுக் கணக்குக் குழு* (Committee on Public Accounts), *பொது நிறுவனங்கள் குழு* (Committee on Public Undertakings), *அவை உரிமைக் குழு* (Committee of Privileges) *ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை நாளை, 2012 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.*

வேட்புத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள், 2012 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் புதன்கிழமை மாலை 4–00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2012 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் புதன்கிழமை மாலை 5–00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.